சுருக்கம்

சிறப்புப் போட்டித் தேர்வு – மாற்றுத் திறனாளிகள் நலம் – தொகுதி IV–ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்கள் – மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பின்னடைவு பணியிடங்களைத் (Backlog Vacancies) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக சிறப்புப் போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (B) துறை

அரசாணை (2.டி) எண்.6 நாள் : 22.02.2011.

திருவள்ளுவர் ஆண்டு 2042
மாசி மாதம் 10–ஆம் நாள்

படிக்கப்பட்டது :

1. அரசாணை நிலை எண்.63, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 18.3.2010
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.186/ RND-D2/ 2000, நாள் 19.07.2010 மற்றும் 28.09.2010.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் நேர்முகக் கடித எண்.3927/ மா.தி.ந.3(1), நாள் 04.10.2010.
4. அரசுக் கடித எண்.50097/B1/2010-1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (B1) துறை, நாள் 24.11.2010.

.........

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரப்பப்படாத பணியிடங்களை நிரப்புவதற்காக சிறப்பு போட்டித் தேர்வு நடத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, நிரப்பப்படாத பணியிடங்கள் குறித்த தகவலை, மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று பணியாளர் தெரிவு செய்யும் (Recruiting agencies) நிறுவனங்களுக்கு அறிவிக்க வேண்டும் எனவும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. அரசுக் கடிதம் எண்.817/G1/2009-1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி) துறை, நாள் 10.02.2009 மற்றும் அரசுக் கடிதம் (நிலை) எண்.49/G1/2009-3, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி) துறை, நாள் 06.05.2009–ன் படி தொகுதி–IV-ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு, வெளியிடப்பட்ட அறிவிக்கைகளை நிறுத்தி வைக்குமாறும் மற்றும் அப்பணியிடங்களுக்குச் சிறப்புபோட்டித் தேர்வு 2007–ல் தேறியவர்களை மட்டுமே நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளதைத் தளர்வு செய்யுமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுள்ளார்.

4. இந்நிலையில், மேலே பத்தி 2–ல் உள்ள கோரிக்கை அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப்பின், மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாத இளநிலை உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட, தொகுதி–IV அளவிலான சிறப்புப் போட்டித் தேர்வு நடத்த தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கேட்டுக்கொள்ளலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.என். வெங்கட்ரமணன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.

<u>நகல்:–</u>

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–2.
சமூக நலத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–2.
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–2.
அரசுச் செயலாளரின் தனிச் செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.